1969 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது எதிர்பாராத நிலையில் ஏற்பட்டது. அபாயம் ஏற்படுமென்று தெரிந்தால் ஒவ்வொரு சமயத்திலும் முன் அறிவிப்பு, எச்சரிக்கை செய்யப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தனுஷ்கோடி கடற்கரையோரப் பகுதிகளில், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கிறபோது இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா, மீனவர்கள் உயிரிழப்பு பற்றியது.

திரு. கரு. சீமைச்சாமி : கடத்திச் சென்று விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் செல்கிறபோது மரணம் ஏற்படுகிற விதத்தில் சில காரியங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிக் கடத்திச் செல்கிற சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கிற விதத்தில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மீன் பிடிக்கப் போனவர்கள் கடலில் மூழ்கி அவர்கள் சடலங்கள் ஒதுங்கியதாகத்தான் தகவல் இருக்கிறதே தவிர, அவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகத் தகவல் இல்லை.

பாக்குச் செடிப்பண்ணைகள்

*** 34 வினா.—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பாக்குக் கன்றுகள் வளர்க்கும் நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

(இ) இவற்றில் ஆண்டொன்றுக்கு எத்தனை கன்றுகள் வளர்க்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) கீழ்க்கண்ட இடங்களில் பாக்குச் செடிப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன:—

பழ ஆராய்ச்சி நிலையம், கன்னியாகுமரி.

மாதிரிப் பழத் தோட்டம்—செடிப்பண்ணை, குற்றாலம்.

மாதிரிப் பழத்தோட்டம்—செடிப்பண்ணை, பெரியகுளம்.

பழ ஆராய்ச்சி நிலையம், கல்லார் மேட்டுப்பாளையம்.

பாக்குச் செடிப்பண்ணை, கடலூர்.

(இ) இந்தச் செடிப்பண்ணைகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

திரு. பெ. மலைச்சாமி : இங்கு உற்பத்தியாகக்கூடிய பாக்குக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா ? ஆமெனில், இதனால் வருகிற வருவாய் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் பாக்குக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதாகத் தகவல் இல்லை. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லக்கூடும். ஆனால் இங்கே சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில்தான் பெருவாரியாக—திருநெல்வேலியில் ஒரு பகுதியிலும்—இந்தக் கன்றுகள் வளர்க்கப்பட்டு, இந்தப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

புதுக்கேசாபுரம் சோதனைச் சாவடி

* 35 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா புது கேசாபுரம் செக் போஸ்டில் (உணவு தானிய பரிசோதனைச் சாலை) அநீதி நடைபெற்றதைக் குறித்து 6—9—1967-ல் அத் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடம் இருந்து புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் இருவர் அரிசி எடுத்துச் சென்றதால் அரிசி கைப்பற்றப்பட்டது. விதிகளுக்கிணங்கியே இந்தப் பறிமுதல் செய்யப்பட்டதால், புகார் மனு மீது நடவடிக்கை எதுவும் எடுக்க அவசியம் ஏற்படவில்லை.

Mixture of Cow's and buffaloe's milk

* 36. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether a new microbiological product consisting of dead bacteria, coloured with a stain, has been discovered to detect adulteration of cow's milk with buffaloe's milk?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம். எருமைப் பாலுடன் பசும் பால் கலப்படம் செய்யப்படுவதை கண்டுபிடிப்பதற்கென ஒரு பரிசோதனை முறை உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், எருமைப் பாலில் 10 சதவீதம் வரை பசும் பால் கலப்படம் செய்யப்பட்டிருப்பதை மட்டுமே இப் பரிசோதனை முறை மூலம் கண்டுபிடிக்க இயலும்.

THIRU K. VINAYAKAM: Sir, was any prize given to the person who was responsible for the discovery of this microbiological product consisting of dead bacteria coloured with a stain? If so, is this practice introduced to detect people who are committing this kind of offence?